STC: 108/2022
PW .1
நாள்.17.04.2023
பெயர்: சாலை மேதினி
த/பெ :சாலை தனராஜ்
வயது :25

(எதிரி ஆஜர்)

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :–</u>

எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லும் தேதியில் நீங்கள் என்ன தொழில் செய்துக்கொண்டிருந்தீர்கள் என்றால் நான் படித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் படித்துக்கொண்டிருந்த விவரத்தை உங்களுடைய தனிநபர் குற்ற முறையீட்டு புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ, குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் எதுவரை படித்துள்ளீர்கள் என்றால் இளங்கலை சட்டம் வரை பயின்றுள்ளேன். மேற்படி சட்டப்படிப்பை நீங்கள் வெளி மாநிலத்தில்தான் பயின்றீர்கள் என்றால் சரிதான்.

வக்கீல் தொழில் இல்லாமல் வேறு ஏதேனும் உங்களுக்கு தொழில் உண்டா என்றால் இல்லை. நீங்கள் எந்த வருடம் வழக்கறிஞராக பதிவு செய்துக்கொண்டீர்கள் என்றால் 2022 ஆம் ஆண்டு பதிவு செய்துக்கொண்டேன். உங்களுடைய மாத வருமானம் எவ்வளவு என்பது பற்றி உங்களுடைய தனிநபர் குற்ற முறையீட்டு புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி உங்களுக்கு என்ன உறவுமுறை என்பதை நீங்கள் இந்த வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. குடும்ப நண்பர் என்று குறிப்பிட்டுள்ளேன். குடும்ப நண்பர் யார் மூலமாக பழக்கம் என்று நீங்கள் இந்த வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

அதேபோல் எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்று நீங்கள் உங்களுடைய தனிநபர் குற்ற முறையீட்டு புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலேயே குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்குக் கொடுத்ததாக சொல்லக்கூடிய தொகைக்கு எத்தனை சதவீதம் வட்டி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடன் தொகைக்காக காசோலையை ஒரு ஆவணமாக கொடுக்கமுடியாது என்றால் சரியல்ல.

நீங்கள் எதிரிக்குக் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு இந்த வழக்கு காசோலையைத் தவிர பிற கடனுறுதிச் சீட்டுகள் எதையும் எதிரியிடமிருந்து பெறவில்லை என்றால் சரியல்ல. கடந்த 2022 ஆம்

வருடத்திற்கு முன்பாக எதிரிக்கும் உங்களுக்கும் பண வரவு செலவு இருந்ததா என்றால் இருந்தது. அந்த முந்தைய வரவு செலவுகளை இந்த வழக்கில் நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நீங்கள் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை, எந்த இடத்தில் வைத்து யார் முன்னிலையில் எதிரியிடம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பணம் யார் முன்னிலையில் சாட்சியாக வைத்து எதிரியிடம் கொடுக்கப்பட்டது என்று நீங்கள் கூறவில்லை. அந்த நபர்களையும் நீங்கள் இந்த வழக்கில் சாட்சியாக சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் வருமான வரி செலுத்துபவரா என்றால் இல்லை.

இந்த வழக்கின் காசோலையைத் தொகையாக சொல்லப்படும் ரூபாய்.4,50,000/- லட்சம் எப்படி உங்களிடம் வந்தது என்று நீங்கள் உங்களுடைய வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய மேற்படிப்பிற்காக என் பெற்றோர்கள் கொடுத்த பணத்தை சேர்த்து வைத்திருந்தேன். அவ்வாறு நீங்கள் சேமித்து வைத்ததற்கான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நீங்கள் வழக்கறிஞராக இருந்தபோதிலும், சட்டத்திற்கு முரணாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 2022, பிப்ரவரி மாதம் மாத வருமானம் என்பதை உங்களுடைய வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உங்கள் வீடு உள்ள மெய்வழிச்சாலையில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள் என்றால் சரிதான். எப்பொழுதுமே அந்த இடத்தில் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

//sd/-சாலை மேதினி,
PW -1.

//sd//- எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் அவர்கள்.